**21.08.2026**

**அ.வ.எண். 22/2023**

**வா.சா.2 – திருமதி.காந்திமதி, க/பெ. தங்கராஜ்**

Solemnly affirmed and sworn by Tmt.A.shanthi Assistant on 21.08.2026 is accordance with the provision of Act X of 3331

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்துக்களை நான் நேரில் பார்த்துள்ளேன். வழக்கு சொத்துக்கு தென்புறமாக லேயவுட் உள்ளது என்றால் கம்பிவேலி உள்ளது, லேயவுட் உள்ளதா என்று நான் கவனிக்கவில்லை. 14.03.2013 தேதியில் நான் ஒப்பந்தத்தை பார்த்தேன். அப்போது கையொப்பம் போட்டு வைத்திருந்தார்களா என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தம் எப்போது போட்டார்கள் என்றும், என்ன பேசிக்கொண்டார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். என்னிடம் கொடுத்தார்கள் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். ஒப்பந்தத்தில் என்ன எழுதப்பட்டுள்ள்து என படித்து பார்த்தேனா என்றால் நான் கையெழுத்து செய்த பக்கத்தை மட்டும் படித்து பார்த்தேன்.

2. வாதிகள் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் எதுவும் தெரியாமல் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அப்போது வழக்கு போட்டவர்கள் அனைவரும் இருந்தார்கள் என்றால் குடும்பத்தினர் அனைவரும் இருந்தோம். வேறு யாரும் இல்லை என்றால் வேறு யாரோ 2 - 3 பேர் இருந்தனர். பார்த்தால் தெரியும். வா.சா.ஆ.12 ஆவணத்தில், என் பெரியம்மா சொன்னதால் நான் கையெழுத்து செய்தேன். பிரச்சனை உள்ள விவரம் பற்றி தெரியும். தேதி என் பெரியம்மா சொல்லி நான் போட்டேன் என்றால் அன்று நான் இருந்தேன். அதனால் போட்டேன். எனக்கு கீழே 2 வதாக உள்ள சாட்சி கையெழுத்து யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகளை எனக்கு தெரியாது, நான் நேரில் பார்த்ததில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur